# <u>தமிழ்நாடு அரசு</u>

சுருக்கம்

நெடுஞ்சாலைத் துறை – சென்னை பெருநகர வளர்ச்சி குழும எல்லைக்குட்பட்ட பகுதிகள் – 2003 – 2004 ஆம் ஆண்டிற்கான அடிப்படை வசதி முதலீட்டுத் திட்டத்தின் கீழ் 27 பணிகளை மேற்கொள்ளுதல் – நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலைத் (எச்.டபிள்யூ.1) துறை

அரசாணை (நிலை) எண்.233 நாள்: 24/11/2003

படிக்கவும்:

தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை, கடிதம் எண். 7918/சாலை 1/2003, நாள் 21/07/2003.

** * **

<u>ஆணை:</u>–

சென்னை பெருநகர வளர்ச்சி குழும எல்லைக்குட்பட்ட பகுதிக்குள் 2003–2004ஆம் ஆண்டிற்கான அடிப்படை வசதி முதலீட்டுத் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்வது குறித்து ஆய்வு கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது.

2) 23/05/2003 அன்று நடைபெற்ற சென்னை பெருநகர வளர்ச்சி குழும எல்லைக்குட்பட்ட பகுதியில் 2003 – 2004 ஆண்டிற்கான அடிப்படை வசதி முதலீட்டுத் திட்டம் (Infrastructure Investment Plan) குறித்த ஆய்வுக் கூட்டத்தில், 2003 – 2004ஆம் ஆண்டிற்கான ஓராண்டு திட்டத்தில் நெடுஞ்சாலைத் துறைக்கான திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் முதல் கட்டமாக 28 பணிகளை ரூ.3034.75 இலட்சம் செலவினத்தில் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.200, நெடுஞ்சாலைத் துறை, நாள் 25/09/2003ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது.

3) தற்போது சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் மற்றும் காவல்துறை ஆகியவற்றைக் கலந்தாலோசித்து கீழ்க்கண்ட 27 பணிகளை இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்வதற்கான செயற்குறிப்பை தலைமைப் பொறியாளர் (பொது) அரசிற்கு அனுப்பியுள்ளார்.

| | | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சென்னை – எண்ணூர் சாலையில் 2.10 கிமீ. திரும்ப தளம் போடுதல் | 45.00 |
| 2. | சென்னை – எண்ணூர் துரித சாலையில் 1.10 கிமீ. திரும்ப தளம் போடுதல் | 21.00 |

| | | |
|---|---|---|
| 3. | மணலி ஆயில் ரிபைனரி சாலையில் 1.90 கிமீ. திரும்ப தளம் போடுதல். | 78.00 |
| 4. | மணலி – மாத்தூர் சாலையில் 4.70 கிமீ. திரும்ப தளம் போடுதல். | 90.00 |
| 5. | மாதவரம் – ரெட்ஹில்ஸ் சாலையில் 7.80 கிமீ. திரும்ப தளம் போடுதல். | 52.00 |
| 6. | செம்பியம் – ரெட்ஹில்ஸ் சாலையில் 2.60 கிமீ. திரும்ப தளம் போடுதல். | 37.00 |
| 7. | கொளடி சாலையில் 3.60 கிமீ. திரும்ப தளம் போடுதல். | 24.00 |
| 8. | மவுண்ட் – மடிப்பாக்கம் சாலையில் கிமீ. 5/4 முதல் 8/6 வரை மேம்படுத்துதல் (3.20 கிமீ.) | 150.00 |
| 9. | எம்.பி.ஐ. ரோடு – எஸ்.கொளத்தூர் சாலையில் கிமீ. 0/0 – முதல் 3/4 வரை மேம்படுத்துதல் (3.40 கிமீ.) | 100.00 |
| 10. | சிட்லபாக்கம் சாலையில் கிமீ. 0/0 முதல் 2/0 வரை மேம்படுத்துதல் (2.00 கிமீ.) | 40.00 |
| 11. | போத்தூர் சாலையில் கிமீ. 0/0 முதல் கிமீ. 5/0 வரை மேம்படுத்துதல் (5.00 கிமீ.) | 30.00 |
| 12. | கொடிமரம் சாலையில் (போர் நினைவு சாலை) கிமீ. 1/450 – 2/100 வரை) அகலப்படுத்துதல் (0.65 கிமீ.) | 200.00 |
| 13. | கிரீன்வேஸ் சாலை மற்றும் சாந்தோம் சாலையை அகலப்படுத்துதல் (தெற்கு கடற்கரை சாலை கிமீ. 7/5 – 9/3) (1.80 கிமீ.) | 194.70 |
| 14. | என்.எஸ்.கே. சாலையின் மைய தடுப்புசுவர் மற்றும் கிரீல் அமைத்தல் (ஆற்காடு ரோடு – கிமு. 8/6 – 10/7) (2.10 கிமீ.) | 40.00 |
| 15. | வடக்கு கடற்கரை சாலையின் மன்னார்சாமி கோவில் தெருவில் கிமீ. 2/4 – 3/2 வரை மைய தடுப்புச் சுவர் உயர்த்திக் கட்டுதல் மற்றும் கிரில் அமைத்தல் (0.80 கிமீ. ) | 26.80 |
| 16. | வடக்கு கடற்கரை சாலையின் ராஜாஜி சாலையில் கிமீ. 0/750 முதல் 1/500 வரை மைய தடுப்பு சுவர், கிரில் அமைக்கும் பணி மற்றும் நடைபாதையைக் குறைத்து சாலையை அகலப்படுத்துதல் (0.75) கிமீ. | 40.00 |
| 17. | ஜி.எஸ்.டி. சாலையில் ஹால்டாவிலிருந்து கிண்டி வரை கிமீ. 10/4 – 10/8 வரை சாலையை அகலப்படுத்துதல் (0.40 கிமீ.) | 26.00 |

| | | |
|---|---|---|
| 18. | சாந்தோம் பைபாஸ் சாலையின் கிமீ. 0/0 முதல் 2/5 வரை சுற்றுசுவர் மற்றும் நடைபாதை அமைத்தல் (2.50 கிமீ.) | 100.00 |
| 19. | வடக்கு உஸ்மான் சாலையின் பனகல் பூங்கா சந்திப்பிலிருந்து கோடம்பாக்கம் நெடுஞ்சாலை வரை (கிமீ. 4/780 முதல் 6/080 வரை) நடைபாதையைக் குறைத்து சாலையை அகலப்படுத்துதல் மற்றும் மைய தடுப்பு சுவர் அமைத்தல் (1.30 கிமீ.) | 40.00 |
| 20. | சென்ட்ரல் – திருமங்கலம் சாலையில் அண்ணா நகர் 2 மற்றும் 1 அவின்யூவில் மைய தடுப்பு கிரில் அமைத்தல் (1.60 கிமீ.) | 35.00 |
| 21. | உள்வட்டச் சாலையின் கிமீ. 0/0 முதல் 0/2 வரை அகலப்படுத்துதல் (0.20 கிமீ.) | 20.00 |
| 22. | உள்வட்டச் சாலையின் கிமீ. 7/2 முதல் 8/3 வரை மழைநீர் கால்வாய் அமைத்தல் (1.10 கிமீ.) | 60.00 |
| 23. | ஜி.டபிள்யூ.டி. (G.W.T.) சாலையை அகலப்படுத்துதல் (வைஷ்ணவா கல்லூரி அருகில், கிமீ. 7/3 – 9/2 (1.90 கிமீ.) | 43.50 |
| 24. | உள்வட்டச் சாலையின் கிமீ. 11/3 சந்திப்பை மேம்படுத்துதல் | 20.00 |
| 25. | ஜி.என்.டி. சாலையின் கிமீ. 6/2 – 7/0 அகலப்படுத்துதல் (0.80 கிமீ.) | 40.00 |
| 26. | ராதாகிருஷ்ணன் சாலை, கத்தீட்ரல் சாலை மற்றும் டி.டி.கே. சாலையில் கிரானட் நடைபாதை அமைத்தல் (5.50 கிமீ.) | 200.00 |
| 27. | சர்தார்பட்டேல் சாலை மற்றும் காந்தி மண்டபம் சாலையில் கிரானைட் நடைபாதை அமைத்தல் (6.00 கிமீ.) | 200.00 |
| | மொத்தம் | 1953.00 |

3) தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் செயற்குறிப்பை ஏற்று, சென்னை பெருநகர வளர்ச்சி குழும எல்லைக்குட்பட்ட பகுதிக்குள் 2003 – 2004ஆம் ஆண்டிற்கான அடிப்படை வசதி முதலீட்டுத் திட்டத்தின் கீழ் (Infrastructure Investment Plan) 27 பணிகளை ரூ.1953.00 இலட்சம் (ரூபாய் பத்தொன்பது கோடியே ஐம்பத்தி மூன்று இலட்சம் மட்டும்) செலவினத்தில் மேலே பத்தி –2ல் குறிப்பிடப்பட்ட 27 பணிகளை அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளுவதற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

4) மேலே பத்தி – 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“5054 – சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு – 80 – பொது – 800 ஏனைய செலவுகள் – பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II - மாநிலத் திட்டம் – JW –

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் – சென்னை மாநகரில் பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்குப் போக்குவரத்தை மேம்படுத்துதல் – 16 – பெரும்பணிகள் (D.P.C.5054 - 80 - 800 - JW - 1608)".

5. இவ்வரசாணை நிதித் துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.கு. எண்.816 து.செ.(வி.என்.பி)/2003, நாள் 24/11/2003 வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பி. ராம மோகன ராவ்,
அரசுச் செயலர்.

பெறுநர்

தலைமைப் பொறியாளர் (பொது) நெடுஞ்சாலைத் துறை, சென்னை – 5.
உறுப்பினர் செயலர், சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமம், எழும்பூர், சென்னை – 8.
மாநில கணக்காயர், சென்னை – 18.
மாநில கணக்காயர், சென்னை – 18. பெயரில்
மாநில கணக்காயர், சென்னை – 35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 5.

நகல்:
நிதி (பொதுப்பணி – 1), சென்னை – 9.
வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, சென்னை – 9.
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை – 9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (பொதுப்பணி, மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வை மற்றும் வருவாய்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.